## 3. லதா க்ருகம்

இத்தலைப்பைப் பார்த்தவுடனே உங்கட்கு வெறுப்புத் தோன்றும். தமிழ்நாட்டில் - தமிழ்மொழி எழுச்சிபெற்று விளங்கும் இக்காலத்தில் - தமிழ் ஆர்வம் மிகுந்துள்ள இந்நேரத்தில், புரியாத வடமொழியில் இப்படிப்பட்ட ஒரு தலைப்பா? என்றெல்லாம் எண்ணக்கூடும்; ஆம்! தமிழ் வளர்ச்சி பெற வேண்டும்! எழுச்சி பெற வேண்டும்! தனித் தமிழே எங்கும் வழங்க வேண்டும்! தமிழகத்தின் எல்லாத் துறைகளிலும் தமிழே வழங்கவேண்டும்! என்ற பேராசையால், அல்லும் பகலும் ஆர்வமோடுழைத்து வந்த ஒருவரால் சொல்லப்பட்டதுதான் இந்தத் தலைப்பு.

தமிழுக்குப் பாடுபட்ட ஒருவரா இப்படிப்பட்ட தலைப்புத் தந்தார்? இதை எப்படி நம்புவது? - என்றெல்லாம் எண்ணுவீர்கள்.

**"பிந்தி வடக்கினிலே - மக்கள்**
**பேசிடும் பேச்சினிலே பாட்டு நடத்தினன்;**
**எந்தவிதம் சகிப்பேன்! - கண்ட**
**இன்பம் அனைத்திலும் துன்பங்கள் சேர்ந்தன!"**

என்றும்,

**"பொருளற்ற பாட்டுக்களை - அங்குப்**
**புத்தமு தென்றனர் - கைத்தாள மிட்டனர்**
**இருளுக்குள் சித்திரத்தின் - திறம்**
**ஏற்படுமோ? இன்பம் வாய்த்திடக் கூடுமோ?"**

என்றும் பாடிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனவர்கள், தாம் எழுதிய ஒரு நாடகத்திற்கு இட்ட பெயரே "லதா க்ருகம்" என்பது.

பாரதிதாசனவர்களா இப்படிப் பெயர் வைத்தார்? அப்படிப்பட்ட ஒரு நாடகத்தை நாங்கள் அறியோமே என்றெல்லாம் ஐயப்படுவீர்கள்.

உண்மைதான். அந்நாடகம் யாரும் பார்க்க முடியாதபடி மறைந்தே போயிற்று! அதை நடித்துக் காட்டுவதற்காக, இருமுறை

முயன்று, பல ஒத்திகைகளும் நடைபெற்றன. ஆனால் நாடகம் நடைபெறாமலே போயிற்று. மறைந்து போயிற்று.

என்ன இருந்தாலும், தமிழின் அழகிய பெயர் இருக்க, வடமொழிப் பெயரையா வைப்பது? என்று கேட்கலாம். இதில், ஒரு வரலாறே அடங்கியிருக்கிறது. அதைத்தான் இங்கே விவரிக்கிறேன்.

இன்றைக்குச் சற்றேறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன் உங்களை அழைத்துச்செல்ல விரும்புகிறேன். அப்பொழுதெல்லாம் தமிழ்நாட்டில் தமிழ் சாகாமல் இருந்திருக்கின்றது. அவ்வளவுதான். தமிழைப் போற்றி வளர்க்க கடமைப்பட்ட புலவர்களெல்லாம், அதனை மறந்து புரியாத வடமொழியில் புலமை உடையவராகக் காட்டிக் கொள்வதிலேயே புகழுண்டு என வீண்மயக்கங் கொண்டிருந்த காலம் அது. சங்க காலத்திற்குப் பிறகு, தமிழ்ப் புலவர்கள் தமிழை வளர்க்க வில்லை. மாறாகத் தமிழ்நாட்டில் வடமொழியை வளர்க்கப் போட்டி யிட்டுக் கொண்டு முன் வந்தனர். வடமொழி அறிந்தால்தான், எழுதினால்தான், தமக்கு மதிப்பு உண்டு என்றும் கருதினர். இந்த மயக்கத்தைப் பகுத்தறிவு இயக்கமுங் கூடத் தொடக்கத்தில் போக்க முனைய வில்லை. அப்பொழுதெல்லாம் அது இந்து மதம், சாதி, சமயம், மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில்தான் புரட்சியை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது. தமிழ், தமிழன், தமிழ்நாடு என்பன பற்றிய எண்ணமே கொண்டிராத நேரம்! தமிழர்களும் தம்மை மறந்திருந்தகலாம்.

இப்படிப்பட்ட காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் - அவர்கள் சீர்திருத்த ஆர்வலராக இருந்தாலும் - வடமொழியை மிகுதியாகக் கலந்து எழுதுவதையே பெருமையாகக் கொண்டிருந்தனர் என்றால், நம் கவிஞரவர்களும் அம்முறையைப் பின்பற்றி எழுதியதில் வியப்பில்லை அன்றோ!

இன்று, இந்தித் திணிப்பை எல்லோரும் கண்டிக்கிறார்கள். தமிழ் நாட்டில் பிறமொழி ஆட்சி என்றால், எல்லோரும் வெறுக்கிறார்கள். தமிழகத்தில், தமிழே ஆட்சிமொழி என்ற ஆர்வக் குரல் எழுப்பு கிறார்கள். சீனர்கள் கஞ்சாப் புகைக்குக் கட்டுப்பட்டிருந்ததுபோல், வடமொழி மயக்கத்தில் தம்மை மறந்திருந்த தமிழருக்கு இந்த எழுச்சியும் விழிப்பும் எப்படி வந்தன?

பகைவன் செய்த கெடுதியும் ஒருவகையில் நன்மையாகவே முடிந்தது என்பது போல், இந்தி வெறியர்கள் தம்மொழியை இங்குத் திணிக்க முற்பட்டதே, தமிழின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் முதற் காரணமாகி விட்டிருக்கின்றது. அவர்கள் இந்தியைத் திணிக்கும் நோக்கம் என்றென்றும் பிறரை அடிமை ஆக்கி வைக்கும் சூழ்ச்சித் திட்டமாக இருந்தபோதிலும் அது தமிழரிடையே ஒரு விழிப்புணர்ச் சியை ஏற்படுத்தி விட்டிருக்கிறது. இதற்காகவேனும் நாம் அவர்கட்கு நன்றி தெரிவிக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால், தமிழ் இந்த அளவுக்கு ஏற்றம் பெற முடியுமா இவ்வளவு விரைவில்?

பாரதிதாசனவர்கள் பகுத்தறிவு இயக்கத்தில் ஈடுபட்ட பின்னர், அக்கொள்கை களையெல்லாம் அமைத்து, 1932ஆம் ஆண்டில் ஒரு நாடகம் எழுதினார். அந்நாடகந்தான் "லதா க்ருகம்" என்பது. அதில் மடங்களின் முறைகேடுகள், தீண்டாமை ஒழிப்பு முதலாவதாக விளக்கப்பட்டிருக்கிறது.

**லதா க்ருகம்**

சீர்திருத்தத் தொண்டர் தம் பணியை மேற்கொண்டபோது, மடத்தலைவர்கள் சூழ்ச்சித் திட்டத்திற் சிக்கித் துன்பத்திற்கும் கேட்டிற்கும் ஆளாகி முடிவில் சாவை எதிர்நோக்கும் நிலையை அடைகிறார்கள். அவர்களிலிருந்து தப்பிய சிலர் புரட்சி வீரர்களாக மாறிக் காட்டைப் புகலிடமாகக் கொண்டு, இன்னலிற் சிக்கிய தோழர்களைக் காப்பாற்றுகிறார்கள். பின்னர், பழமை வலுவிழந்து சீர்திருத்தம் வெற்றி வாகை சூடுகிறது.

இந்நாடகத்தின் தலைவனும் தலைவியும் புரட்சி வீரர்களாகிக் காட்டிற்குள் இருப்பவர்கள். ஒருகால் அவர்கள் காட்டில் தம் குடிசை முன் அமர்ந்திருந்தபோது, இக்குடிசைக்கு ஏன் "லதா க்ருகம்" என்று பெயரிட்டீர்கள் என்று தலைவி கேட்கிறாள். அதற்குத் தலைவன், 'நம் நோக்கம் வெற்றியாக நிறைவேறுவதற்கு உறு துணையாக இருப்பவள் நீயே யாதலின் "லதா" என்னும் உன் பெயரையே இக்குடிசைக்குச் சூட்டினேன் என்கிறான். அதற்கவள், எல்லாவற்றிலும் முதற் காரணமாக இருப்பவர் நீரேயாதலின், உம் பெயரால் இக்குடிசைப் பெயர் அமைவதே சிறப்புடையதாகும் என்கிறாள்; அதற்குத் தலைவன், 'நாம் தங்கியிருக்கும் இவ்விடம், மாட மாளிகையல்ல, தழைகளால் வேயப்பட்ட ஒரு குடிசை. லதா என்றால் தழை; க்ருகம்

என்றால் வீடு. தழை வீடு என்பதே அதன் பொருள். அதே நேரத்தில் லதாவின் வீடு என உன் பெயராலும் அமைந்திருப்பது எவ்வளவு பொருத்தம்' என மகிழ்வதாகக் கூறுகிறான். இதுவே, இந்நாடகத்தின் தலைப்பாக அமைந்தது.

நாடகம், பல சுவைகளையும் ஒருங்கே கொண்டிருந்தது. இதற்குப் பாவேந்தர் எழுதிய பாடல்களும், மிகப் பொருத்தமாகவே அமைந் திருந்தன. அக்காலத்தில் ஒத்திகை பார்த்தபோது, என் மனத்தில் பதிந்த ஒரு பாட்டு, இன்றும் என் நினைவில் இருந்து வருகிறது. இப்பாட்டு, இன்று எங்கும் கிடைக்காது; எதிலும் வெளிவரவுமில்லை.

சீர்திருத்தம் கூட்டத்தைச் சேர்ந்த ஓர் இளம் பெண் இந்நாடகத்தின் தலைவி. பெண்ணடிமை போக்கத் தொண்டாற்றுகிறாள். அவளிடம் சீர்திருத்தக்காரர்களுக்கு ஏற்படும் தொல்லை, துன்பம் ஆகியவற்றை எடுத்துக் கூறி - நீ இப்பணியில் ஈடுபடாதே எனத் தாய் தடுக்கிறாள். அப்படித் தடுக்கும் தாய்க்கு, எழுச்சியோடு கூறும் பாடலே அது. வீரச் சுவைமிகுந்த அப்பாடல், இன்றும் நம் பெண்ணினத்திற்கு தேவைப் படுவது தான். கானடைந்து போய்விட்ட கவிஞரின் இப்பாடல், வீரச் சுவைக்கு ஓர் இலக்கியமாகும். என் நினைவிலுள்ள அப்பாட்டு எல்லோர் நினைவிலும் இருக்க வேண்டும் என்று கருதியே அப்பாட்டுத் தோன்றிய நிகழ்ச்சியையும் விளக்க வேண்டிய தாயிற்று. அப்பாடல் வருமாறு:

பறந்த தம்மா - கோழைத்தனம்
மறைந்த தம்மா - நெஞ்சுறுதி
பிறந்த தம்மா - நீர் வருந்த
வேண்டாம் சும்மா!
இறந்தாரைப் போலிருந்தால்
என்னாகும் பெண்கள் நிலை!
அறங்கூறும் மார்க்க மென்றே
அடுப்பின் இடுக்கில் ஒடுக்கி வைத்தது
(பறந்த தம்மா)

அஞ்சுவதால் - ஆடவரைக்
கெஞ்சுவதால் - மாதர்குலம்
துஞ்சுவதே - அன்றி ஒரு
சுகங் காண்கிலோம்

வஞ்சியர்க்குத் தீமை செய்யும்
வஞ்சகரை யொழித்திடுவேன்!
கொஞ்சமும் பின்வாங்கேன்
கொடிய நிலையை நொடியில் தவிர்க்க!

(அஞ்சுவதால்)

- புதுவை சிவம் என்கிற சிவப்பிரகாசம்,
பாரதிதாசன் குயில், புதுச்சேரி, 21.4.1968

◆ ◆ ◆